**புதுச்சேரி அரசு**
**செய்தி மற்றும் விளம்பரத் துறை**

# இந்திய திரைப்பட விழா-2011

புதுச்சேரி அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறையும், நவதர்சன் திரைப்படக் கழகமும், புதுவை அலையன்ஸ் பிரான்சேஸூம் இணைந்து "இந்திய திரைப்பட விழா–2011" இம்மாதம் 09-**ஆம்** தேதி முதல் 13-**ஆம்** தேதி வரை கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது. இவ்விழா கடந்த 28 ஆண்டுகளாக எவ்வித இடைவெளியில்லாமல் தொடர்சியாக புதுச்சேரியில் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே நமது மாநிலத்தில் மட்டும்தான் இவ்விழா தொடச்சியாக 28 ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருகிறது என்பது பெருமைக்குறிய செயலாகும். புதுச்சேரி மக்கள் குறிப்பாக இளைய சமுதாயத்தினரிடையில் **"நல்ல சினிமா"** (**Good Cinema**)-வைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்கள் வாழ்வை ஆக்கபூர்வமான ஒரு பாதைக்கு அழைத்து செல்லும் நோக்கில் அமையும் திரைப்படங்களுக்கு சங்கரதாஸ் சுவமிகள் விருது மற்றும் ₹ 50,000/- பணமுடிப்பும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்திய அரசானது, ஒவ்வொரு ஆண்டும் இந்தியத் திரைப்படங்களில் சிறந்த திரைப்படங்களை தேர்ந்தெடுத்து 'இந்திய திரைப்பட விழா' நடத்திவருகிறது. புதுச்சேரி அரசானது அந்த திரைப்படங்களில் புதுச்சேரி பிராந்திய மொழி திரைப்படங்களில் சிறந்த திரைப்படத்தை தேர்வு செய்கிறது. அந்த திரைப்படத்தை இயக்கிய இயக்குனருக்கு "சங்கரதாஸ் சுவாமிகள்" பெயரில் பணமுடிப்பு மற்றும் விருது வழங்கி சிறப்பித்து வருகிறது. இவ்வாண்டின் சிறந்த புதுச்சேரி பிராந்திய மொழி திரைப்படத்திற்கான சங்கரதாஸ் சுவாமிகள் விருது தமிழ் மொழி படமான **"அங்காடித் தெரு"** என்ற திரைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த திரைப்படத்தை இயக்கிய இயக்குநர் திரு. G. **வசந்த பாலன்** அவர்களுக்கு ₹.50,000/-ரொக்கபரிசும் விருது ஒன்றும் வழங்கப்படவிருக்கிறது.

"**அங்காடித் தெரு**" என்ற தமிழ் திரைப்பத்தில் மகேஷ் என்னும் இளைஞரும் அவரை சேர்ந்த பலரும் குடும்ப சூழ்நிலைகளினால் சென்னை வந்து ஒரு பெரிய டிப்பாட்மென்டல் ஸ்டோரில் வேலைக்கு சேர்கிறார்கள். அங்கு அவர்கள் அடிமைகள் போல் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப் படுகிறார்கள். அவர்களில் மகேஷ் மற்றும் அவரின் பெண் தோழியும் முதலாலிகளின் கொடுமையை தாங்கமுடியாமல் அந்த வேலையில் இருந்து நீங்கி அவர்களே அந்த டிப்பார்ட்மென்டல் ஸ்டோருக்கு எதிரில் சிறு சுயத்தொழில் செய்து வருகிறார்கள். அப்போது அவர்கள் வாழ்கையில் ஏதிர்கொள்ளும் இன்னலகளும், அவற்றில் இருந்து அவர்கள் வாழ்கையில் முன்னேறுவது பற்றி இப்படம் சித்தரிக்கின்றது.

இத்திரைப்படத்தில் இளைஞர்கள் எப்படி வாழ்மையில் கஷ்டப்படுகிறார்கள் என்பதையும், மற்றவர்களிடம் அடிமைகளாக வாழ்வதைவிட சுயதொழில் செய்து வாழ்கையில் முன்னேறுவதை பற்றி கூறுயுள்ளது. மேலும், நல்ல நன்பர்கள் வாழ்கையில் சேரும்போது வாழ்கையானது கஷ்டங்களை கடந்து இனிமையானதாக அமையும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் வாழ்கையில் கஷ்டங்களை எதிர்த்து வாழ்கையில் முன்னேற வேண்டும் என்பதை மையக்கருத்தாக கொண்டு இப்படத்தை உருவாக்கி உள்ளனர்.

மேலும், இந்த ஆண்டு திரைப்படவிழாவை சிறப்பாகக் கொண்டடும் பொருட்டு, விருது வழங்கும் விழா அலையன்ஸ் பிரான்சேஸ் திரையரங்கில் 09.09.2011 அன்று மாலை 6.00 மணியளவில் நடைபெறும். இதனைத்தொடர்ந்து 'அங்காடித் தெரு' என்ற தமிழ் திரைப்படம் மாலை 6.30 மணியளவில் அலையன்ஸ் பிரான்சேஸ் திரையரங்கில் பொதுமக்களுக்காக இலவசமாக காண்பிக்கப்படும்.

10.09.2011 முதல் 13.09.2011 வரை மாலை 6.00 மணி அளவில் கீழ்க்கண்ட திரைப்படங்கள் எண் 58, சுப்ரேன் தெரு, புதுச்சேரி என்ற முகவரியில் அமைந்துள்ள அலையன்ஸ் பிரான்சேஸ் திரையரங்கில் பொதுமக்களுக்கு இலவசமாக திரையிடப்படுகின்றன.

10.09.2011 – அமி ஆடு (Ami Aadu) - பெங்காளி மொழித் திரைப்படம்
11.09.2011 – நாலு பெண்ணுங்கள் - (Nallu Pennungal) மலையாள மொழித் திரைப்படம்
12.09.2011 – வனஜா (Vanaja) - தெலுங்கு மொழி திரைப்படம்
13.09.2011 – இராவணன் (Raavanan) - தமிழ் மொழித் திரைப்படம்

எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த திரைப்படங்களை இலவசமாக கண்டுகளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**நன்றி !**